# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணாசாலை, கிண்டி, சென்னை– 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல்முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 007/பேரூ/2023**

**நாள்: 14.03.2023**

திரு. H.சந்திரன்,
அதிகரட்டி, நீலகிரி மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர், அதிகரட்டி பேரூராட்சி
நீலகிரி மாவட்டம் – எதிர்மனுதாரர்

நீலகிரி மாவட்டம், அதிகரட்டி, கதவு எண்.7/219 என்ற முகவரியில் வசிக்கும் திரு. H.சந்திரன் என்பவரின் 07.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.01.2023–ல் பெறப்பட்டு 007/பேரூ/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

நீலகிரி மாவட்டம், அதிகரட்டி, கதவு எண்.7/219 என்ற முகவரியில் வசிக்கும் திரு. H.சந்திரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

" அதிகரட்டி ஊரில் சுமார் 500க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. அவற்றில் அதிகரட்டி பஞ்சாயத்து போர்டு எல்லைக்குட்பட்ட நத்த எண். 1081–ல் 20–க்கும் மேற்பட்ட வீடுகள் ஒரே தெருவாக உள்ளன. அதில் 7/218 கதவு இலக்க எண்ணில் குடியிருக்கும் திரு. ஆர். துரை என்பவர் அரசாங்கத்திற்கு சொந்தமான நத்த இடத்தில் இரண்டு ரூம்கள் கட்டியுள்ளார். அவர் கட்டிய இடத்தை தாண்டி பொதுமக்கள் மற்றும் கால்நடைகள் நடப்பதற்கு இடையூறாக உள்ளது மற்றும் மழைநீர் செல்வதற்கும் பக்கத்து வீட்டுக்காரர்களின் கழிவுநீர் செல்வதற்கும் இடையூறாக உள்ளது. மற்றும் நத்தம் பஞ்சாயத்து பூமியில் பஞ்சாயத்து போர்டுக்கு சொந்தமான பொது குழாயில் பல வருடங்களாக பொதுமக்கள் குடிநீர் எடுத்து கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு இடையூறாக திரு. ஆர். துரை என்பவர் அந்த பொதுகுழாயின் மேல்

படிக்கட்டுக்கள் கட்டி தனது விதி மீறிய கட்டிடத்தின் மேல் அனுபோகம் செய்து வருகிறார். மேற்கண்ட இவைகள் பற்றி பஞ்சாயத்து அலுவலகத்திற்கு புகார் செய்தும் எந்த பலனும் இல்லை. பஞ்சாயத்து அலுவலகத்திலுள்ளவர்களுக்கு அது அரசாங்க பூமி என்பது நன்றாக தெரியும். திரு. ஆர்.துரை, என்பவருக்கு ஆதரவாகவும் அவரது தூண்டுதலின் பேரிலும் செயல் அலுவலர், அதிகரட்டி, ஜெய்கணேஷ் OA அதிகரட்டி, மணிகண்டன் எலக்ட்ரீசியன் 3 பஞ்சாயத்து போர்டு அலுவலர்களும் ஒன்றாக இணைந்து திரு. ஆர்.துரை என்பவருக்கு நேரடியாகவே உதவி செய்கிறார்கள். மேற்கண்ட இடம் அரசாங்கத்தின் இடம் என்பதை (நத்தம் 1081) நன்றாக தெரிந்தும் அவருக்கு உதவி செய்கிறார்கள். ஆகவே அதிகரட்டி பஞ்சாயத்து போர்டு செயல் அலுவலர் மற்றும் 2 ஊழியர்கள் மீதும் தக்க விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் அரசாங்க நிலத்தை அபகரித்த திரு.ஆர்.துரை என்பவரின் விதி மீறிய கட்டிடத்தின் மீதும் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்டவைகளுக்கான ஆதாரத்தை இத்துடன் இணைத்துள்ளேன். அவர் விதி மீறி கட்டிய இடம் 100 வருடத்திற்கான நடைப்பாதை என்பதையும், அதற்கான வடக்கு, தெற்கு திசைக்கான செக்குபந்தி பத்திரத்தையும் இத்துடன் இணைத்துள்ளேன். மற்றும் செயல் அலுவலர், அவரது ஊழியர்கள் ஒன்றாக இணைந்து தில்லுமுல்லு வேலைகள் செய்ததற்கான வழக்கறிஞர் நோட்டீஸ் 2, அவர்களுக்கு எதிரான காவல்துறை மனுவையும் இத்துடன் இணைத்துள்ளேன். அந்த கட்டிடத்திற்கான பொது குடிநீர்கான புகைப்பட நகலையும் இத்துடன் இணைத்துள்ளேன். ஆகவே தயவுகூர்ந்து தக்க நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2) இம்மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவ 31.01.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் அதிகரட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை கோரப்பட்டது.

3) அதிகரட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 03.03.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

“ அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட அதிகரட்டி கிராமத்தில் சுமார் 800க்கும் அதிகமாக உள்ள குடியிருப்புகள் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட குடியிருப்புகள் ஆகும். இக்குடியிருப்புகள் அனைத்தும் கிராம நத்தத்தில் கட்டப்பட்டுள்ளன. இக்குடியிருப்புகளுக்கு முன் பகுதியை அந்தந்த வீட்டு உரிமைதாரர்களே பயன்படுத்தி வந்துள்ளனர். அரசால் படிப்படியாக சம்பந்தப்பட்ட குடியிருக்கும் உரிமைதாரர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. கதவு எண் 7/218 கொண்ட வீட்டின் உரிமையாளர் திரு டி.கணேசன் என்பவர், திரு எச். சந்திரன் என்பவரால் பேரூராட்சியின் நடைப்பாதையை இடித்து கழிப்பிடம் கட்டப்படுவதாகவும், இப்பேரூராட்சியில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் புகார் மனு அளித்திருந்ததால், அதன் அடிப்படையில் அதிகரட்டி பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் இரு பணியாளர்களை சம்பந்தப்பட்ட இடத்தினை ஆய்வு செய்து வருமாறு அறிவுரை வழங்கியதன் அடிப்படையில், சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரரை நடைப்பாதை ஆக்கிரமிப்பு செய்து கழிப்பறை அமைப்பது தவறு எனவும், இது குறித்து செயல் அலுவலரிடம் விளக்கம் கூறி தங்கள் மீது மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், தற்போது இப்பணியினை உடனே நிறுத்துமாறும் திரு எச். சந்திரன் என்பவரின் மனைவியிடம் எடுத்துரைத்து வந்துள்ளனர். மறுநாளில் செயல் அலுவலர்(ஓய்வு) நேரடி ஆய்வில் பேரூராட்சியின் நடைபாதை ஆக்கிரமிப்பு செய்து கழிப்பிடம் கட்டி வருவதை பார்வையிட்டு, மேலும் செயல் அலுவலரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இவ்விரு நிகழ்விலும் திரு எச். சந்திரன் அவ்விடத்தில் இல்லை.

திரு எச். சந்திரன் என்பவர் வழக்கறிஞரின் 26.08.2019 நாளிட்ட கடிதம் மூலம் பேரூராட்சி பணியாளர்கள் மீது தவறான புகாரினை பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களுக்கு புகார் அளித்துள்ளார். பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், உதகை அவர்களின் குறிப்பாணைக்கிணங்க பேரூராட்சி அலுவலக 08.05.202 நாளிட்ட கடிதம் மூலம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், உதகை அவர்களுக்கு விரிவான பதிலறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் கழிப்பிடம் அமைக்க இடம் வசதி இல்லாததால் அரசின் தூய்மை இந்தியா திட்டத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு அரசு திட்டத்தை பயன்படுத்தி மனுதாரர் கழிப்பிடம் கட்டியுள்ளார். மேலும் திரு டி. கணேசன் என்பவருக்கும் மனுதாரர் திரு எச். சந்திரன் என்பவருக்கும் தங்களது சொந்த வீடுகள் அருகருகே உள்ளதால் வீட்டு பராமரிப்பு பணியின்போது இருவரிடையே பிரச்சனை ஏற்பட்டுள்ளது. இருவருமே பேரூராட்சி அலுவலகத்திற்கு புகார் அளித்துள்ளனர். செயல் அலுவலர் நேரடி ஆய்வில், திரு டி.கணேசன் என்பவர், திரு சந்திரன் வீட்டு பணி ஆரம்பிப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே கழிப்பிடம் அமைத்துள்ளார். மனுதாரர் வேண்டுமென்றே தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவ அலுவலத்திற்கு புகார் அளித்துள்ளார்.

மனுதாரர் வேண்டுமென்றே காழ்ப்புணர்ச்சியின் காரணமாக செயல் அலுவலர் மற்ற பணியாளர்கள் மீது முறைமன்ற நடுவத்திற்கு புகார் அளித்துள்ளார் எனவும் மேற்காண் புகாருக்கு சம்பந்தப்பட்ட இடத்தின் புகைப்பட நகல்களை இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 06.03.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 22.02.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் 06.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்:

" அதிகரட்டி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட நத்தம் எண். 1081ல் குடியிருப்பு எண். 7/218ல் வசித்து வரும் திரு ஆர்.துரை என்பவர் அங்குள்ள தெருவை ஆக்கிரமித்தும், எங்களது இடத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்தும் இரண்டு அறைகள் கட்டியுள்ளதால் அங்கு மழைநீர் செல்வதற்கும் கழிவு நீர் வெளியேறுவதற்கும் பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது. அங்கு செல்லும் கழிவு நீர் முறையாக செல்வதற்கு வழியில்லாததால், எங்களது தெருவிலேயே தேங்கி சுகாதாரக்கேடு ஏற்பட்டு வருகிறது. மேலும், மேற்கண்ட நபர் பேரூராட்சிக்கு சொந்தமான பொது குடிநீர் குழாய் அமைந்துள்ள இடத்தின் அருகில் தனது குடியிருப்புக்கான படிக்கட்டுகளை விதிகளை மீறி கட்டியுள்ளார். இந்த விதி மீறல்களுக்கு பேரூராட்சி அலுவலர்கள் உறுதுணையாக உள்ளனர். எனவே, திரு ஆர்.துரை என்பவர் விதிகளை மீறி கட்டியுள்ள கட்டடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும், மேற்கண்ட இடத்தில் கழிவு நீர் தேங்காதவாறு பேரூராட்சியின் மூலம் வழி ஏற்படுத்திக் கொடுத்திடவும் இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6)அதிகரட்டி பேரூராட்சி செயல் அலுவலர்(பொ) 06.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :

" மனுதாரர் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள அதிகரட்டி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட நத்தம் எண்.1081ல் அமைந்துள்ள குடியிருப்புப் பகுதிகளுக்குச் சென்று என்னால் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. வீட்டின் உரிமையாளர் திரு ஆர்.துரை என்பவரும் மனுதாரரான திரு எச்.சந்திரன்

என்பவரும் பேரூராட்சியின் நடைபாதையை ஆக்கிரமிப்பு செய்து கழிப்பறைகள் கட்டியுள்ளனர். இவர்கள் இருவருக்கும் உள்ள சொந்தப்பிரச்சனை காரணமாக இருவரும் பேரூராட்சியில் புகார் அளித்து வருகின்றனர். எனவே, மனுதாரரும், மனுதாரரால் குற்றம் சாட்டப்பட்ட திரு. துரை என்பவரையும் நேரடியாக அழைத்து, அவர்களிடம் உள்ள பட்டா போன்ற ஆவணங்களை பெற்று கூறாய்வு செய்து அதன் அடிப்படையில் சட்டப்படியான நடவடிக்கைகள் பேரூராட்சியால் எடுக்கப்படும் எனவும், மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள மேற்கண்ட பகுதியில் கழிவு நீர் தேங்காமல் செல்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன் அறிக்கையை இம்முறைமன்றத்தில் இன்னும் 1 மாத காலத்தில் சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது 03.03.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் அதிகரட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

நீலகிரி மாவட்டம், அதிகரட்டி என்கிற இடத்தினை சார்ந்த மனுதாரர் திரு H.சந்திரன் என்பவர் தனது முறையீட்டு மனுவில் அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட நத்தம் எண் 1081 கதவு எண்.7/218–ல் வசித்து வரும் திரு.ஆர்.துரை என்பவர் விதிகளை மீறி தெருவினை ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டியுள்ளதால் மழைநீர் செல்வதற்கும் மற்றும் கழிவுநீர் வெளியேறுவதற்கும் இடையூறாக உள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.

பணியிட மாற்றம் காரணமாக 01.03.2023 அன்று முதல் அதிகரட்டி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியினை மேற்கொண்ட செயல் அலுவலர் மேற்காணும் புகார் குறித்து மனுதாரர் திரு H.சந்திரன் என்பவரின் (கதவு எண்.7/219) குடியிருப்பினையும் மற்றும் மனுதாரரால் புகாராக தெரிவிக்கும் திரு ஆர்.துரை என்பவரின் குடியிருப்பினையும் (கதவு எண்.7/218) நேரடியாக ஆய்வு செய்யப்பட்டதில் மேற்காணும் இருவரும் பேரூராட்சியின் நடைபாதையினை ஆக்கிரமிப்பு செய்து கழிவறைகள் கட்டியுள்ளதாக பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

இந்நிலையில் பேரூராட்சி செயல் அலுவலரின் நேரடி கண்காணிப்பில் கிராம நிர்வாக அலுவலர் (VAO) மற்றும் நில அளவையாளர் (Surveyor) மூலம் மனுதாரர் திரு.H.சந்திரன் மற்றும் மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள திரு.ஆர்.துரை என்பவரின் குடியிருப்புகளை அளவீடு செய்து, அவர்களின் குடியிருப்புக்காக கட்டப்பட்ட கட்டடம் பட்டாவின்(patta) அடிப்படையில் உள்ளதா என்பதை உறுதி செய்திடவும், அவ்வாறு பட்டாவில் வரையறுக்கப்பட்ட அளவீடு மீறி மேற்காணும் இருவர்களால் ஆக்கிரமிப்பு செய்து கழிவறைகள் உட்பட கட்டடம் கட்டப்பட்டிருந்தால், ஆக்கிரமிப்பினை அகற்றிட உரிய சட்டப்படியான நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் மற்றும் மனுதாரர் குடியிருக்கும் பகுதியில் கழிவுநீர் தேங்கி உள்ளதாக தெரிவிக்கப்பட்ட புகாரையும் உடனடியாக, சீர் செய்து, பொதுமக்களிடமிருந்து சுகாதார சீர்கேடு தொடர்பாக எவ்வித புகாருக்கும் இடம் அளிக்காதவண்ணம் உறுதி செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தியும், இந்நடவடிக்கைகள் அனைத்தும் 1 மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டு அதன் அறிக்கையினை

இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறும் அதிகரட்டி பேரூராட்சி செயல் அலுவலரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

நீலகிரி மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் இதனை உறுதி செய்ய அறிவுறுத்தப்படுகிறார். இதுகுறித்த அறிக்கையை ஒரு மாத காலத்திற்குள் இம்மன்றத்திற்கு அனுப்பி வைக்கவும் அறிவுறுத்தப்படுகிறது.

2023-ஆம் ஆண்டு மார்ச் திங்கள்14-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. H. சந்திரன்,
ஏண்.7/219, அதிகரட்டி,
அதிகரட்டி அஞ்சல்.
நீலகிரி மாவட்டம் – 643 003.

2) செயல் அலுவலர்,
அதிகரட்டி பேரூராட்சி,
அதிகரட்டி,
நீலகிரி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நீலகிரி மாவட்டம்.

4) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 28.

5) இணை இயக்குநர் (பொ) மற்றும்
ஒருங்கிணைப்பு அலுவலர்(Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகுமுறைமன்றநடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்